www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 19
## (பொதுத் தமிழ்)

1. பிரித்தெழுதுக: தெங்கம்பழம்
அ) தெங்கு + அம்+பழம் ஆ) தெங்கு + பழம்
இ) தெங்கம் + பழம் ஈ) தெங் + கம்பழம்

2. பிரித்தெழுதுக: வடவெல்லை
அ) வட + எல்லை ஆ) வட + வெல்லை
இ) வடக்கு + எல்லை ஈ) வடக்கு + வெல்லை

3. பிரித்தெழுதுக: ஐம்பெருங்காப்பியம்
அ) ஐம் + பெருங்காப்பியம்
ஆ) ஐந்து + பெருங்காப்பியம்
இ) ஐந்து + பெருமை + காப்பியம்
ஈ) ஐ + பெருங்காப்பியம்

4. பிரித்தெழுதுக : தீந்தமிழ்
அ) தீம் + தமிழ் ஆ) தீ + தமிழ்
இ) தீந் + தமிழ் ஈ) தீந்து + தமிழ்

5. பிரித்தெழுதுக: சாந்துணை
அ) சா + துணை ஆ) சாந் + துணை
இ) சாந்து + துணை ஈ) சாகும் + துணை

6. எதிர்ச்சொல் தருக: 'சிற்றூர்'
அ) சிறிய ஊர் ஆ) பேரூர்
இ) பெரிய ஊர் ஈ) போரூர்

7. எதிர்ச்சொல் தருக: ஓடுமீன்
அ) ஓடுகின்ற மீன் ஆ) ஓடா மீன்
இ) உறுமீன் ஈ) ஓடாத மீன்

8. எதிர்ச்சொல் தருக: வலம்புரி
அ) தர்மபுரி ஆ) பக்கபுரி
இ) வலாபுரி ஈ) இடம்புரி

9. எதிர்ச்சொல் தருக: நல்லார்
அ) நல்லவர் ஆ) கெட்டவர்
இ) அல்லார் ஈ) பொல்லார்

10. ஏற்ற தமிழ்ச்சொல் தருக: ஃப்ரூட் சாலட்
அ) பழக்கூட்டு ஆ) பழ உப்பு
இ) பழச்சாறு ஈ) பழ ஜூஸ்

11. ஏற்ற தமிழ்ச்சொல் தருக: பிளாஸ்டிக்
அ) பிளாஸ்டிக் ஆ) பாலித்தீன்
இ) ஒளிப் பை ஈ) நெகிழி

12. ஏற்ற தமிழ்ச்சொல் தருக: பால்கனி
அ) பால் இனிப்பு ஆ) முகப்பு மாடம்
இ) பால்கனி ஈ) பால் பழம்

13. Bio-Diversity என்பதன் தமிழாக்கம்
அ) பல்லுயிர்ப் பெருக்கம் ஆ) உயிர் - விரவல்
இ) உயிர்ப் பெருக்கம் ஈ) பல்லுயிர் வாழிடம்

14. ஏற்ற தமிழ்ச்சொல் தருக: ஃபேக்ஸ்
அ) தந்தி ஆ) கூரியர்
இ) தொலைநகலி ஈ) தொலைபேசி

15. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க:
காலை காளை
அ) பொழுது எருது
ஆ) நாளின் முதற்பகுதி மாலை
இ) மாடு எருமை
ஈ) நாள் மாடு

16. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க:
அலகு அளகு
அ) காட்டுக்கோழி அளவு
ஆ) அலங்காரம் அணி
இ) அளவைக் கூறுதல் காட்டுக்கோழி
ஈ) அழகு அளவு

17. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க:
உரவு உறவு
அ) சுற்றம் வலிமை
ஆ) நட்பு தோழமை
இ) இளமை விருந்து
ஈ) வலிமை சுற்றம்

18. 'பாடு' என்னும் வேர்ச் சொல்லின் வினைமுற்றைக் காண்:
அ) பாடிய ஆ) பாடு
இ) பாடினான் ஈ) பாடி மகிழ்ந்தான்

19. 'சிரி' என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சம் காண்:
அ) சிரித்தல் ஆ) சிரித்து
இ) சிரித்த ஈ) சிரித்தபடி

20. 'தூங்கு' என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் தேர்ந்தெடு:
அ) தூங்கிய ஆ) தூங்கியவன்
இ) தூங்க ஈ) தூங்குதல்

21. 'நில்' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர்
அ) நின்று ஆ) நின்றான்
இ) நின்றவன் ஈ) நிற்றல்

22. 'செல்' என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம் காண்
அ) செல்தல் ஆ) சென்ற
இ) சென்று ஈ) சென்றான்

23. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க:
அ) கழனி, காலன், கவலை, கொற்றம், கோறல்
ஆ) கொற்றம், கோறல், கழனி, காலன், கவலை
இ) கவலை, கழனி, காலன், கொற்றம், கோறல்
ஈ) கோறல், கொற்றம், கழனி, காலன், கவலை

24. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க:
அ) அந்தகன், அரம்பை, அற்றார், அரி
ஆ) அரம்பை, அரி, அற்றார், அந்தகன்
இ) அரி, அற்றார், அரம்பை, அந்தகன்
ஈ) அந்தகன், அரம்பை, அரி, அற்றார்

25. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க:
அ) மலர்க்கை, மலர்க்கரம், மதிமுகம், மாமன்னர்
ஆ) மதிமுகம், மலர்க்கரம், மலர்க்கை, மாமன்னர்
இ) மலர்க்கரம், மலர்க்கை, மதிமுகம், மாமன்னர்
ஈ) மாமன்னர், மலர்க்கை, மலர்க்கரம், மதிமுகம்

26. கடைச் சங்கத்திற்கு முன்னிலை வகித்தவர்

www.LatestWalkin.com

அ) பாண்டியன் நெடுஞ்செழியன்
ஆ) நக்கீரர்
இ) கபிலர்
ஈ) அதங்கோட்டாசான்

27. பைபிளைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்
அ) சீகன்பால்கு ஐயர் ஆ) ஜி.யு.போப்
இ) இராபர்ட்டி.நோபிலி ஈ) கால்டுவெல்

28. 'மணநூல்' என்றழைக்கப்படும் நூல்
அ) சீவக சிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம்
இ) மணிமேகலை ஈ) நளவெண்பா

29. 'நல்ல' என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
அ) உரிச்சொல் தொடர்
ஆ) குறிப்பு வினையாலணையும் பெயர்
இ) வினையெச்சம்
ஈ) பெயரெச்சம்

30. 'பெய்திரீஇ' என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
அ) செய்யுளிசையளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) இன்னிசையளபெடை ஈ) சொல்லிசையளபெடை

31. 'பெண்மை நலம்' என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
அ) பண்புத்தொகை
ஆ) எண்ணும்மை
இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
ஈ) உம்மைத் தொகை

32. 'முத்தமிழே' என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
அ) விளித் தொடர் ஆ) பண்புத்தொகை
இ) வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

33. 'வினைப்பயன்' என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
அ) இரண்டாம் வேற்றுமைத்தொகை
ஆ) மூன்றாம் வேற்றுமைத்தொகை
இ) ஆறாம் வேற்றுமைத்தொகை
ஈ) ஏழாம் வேற்றுமைத்தொகை

34. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு:
கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல் ஆவார்
அ) கம்பரை சடையப்ப வள்ளல் ஆதரித்தாரா?
ஆ) யார் கம்பரை ஆதரித்தார்?
இ) கம்பரை சடையப்ப வள்ளல் ஆதரித்ததில் வியப்பு உண்டோ?
ஈ) சடையப்ப வள்ளல் கம்பரை ஏன் ஆதரித்தார்?

35. விடைக்கேற்ற சரியான வினாவைத் தேர்ந்தெடுக்க:
ஈர நெஞ்சினரை வள்ளல்கள் என வாழ்த்துகிறோம்
அ) யாரை வள்ளல்கள் என வாழ்த்துகிறோம்?
ஆ) எவ்வாறு ஈர நெஞ்சினரை வாழ்த்துகிறோம்?
இ) ஈர நெஞ்சினரை யார் என்று வாழ்த்துகிறோம்?
ஈ) வள்ளல்கள் என வாழ்த்தப்படுபவர் யார்?

36. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்புக்குரியது
அ) சித்த வைத்தியத்தின் சிறப்பு பற்றிக் கூறு
ஆ) சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமையுமா?
இ) சித்த வைத்தியம் என்றால் என்ன?
ஈ) சித்த வைத்தியத்தில் வியப்புக்குரியது எது?

37. பின் வருவனவற்றுள் ஒழுங்கான சொற்றொடரைக் கண்டு எழுதுக:
அ) பிறர்தர வாரா நன்றும் தீதும்
ஆ) தீதும் நன்றும் பிறர் தர வாரா
இ) நன்றும் தீதும் பிறர் தர வாரா
ஈ) வாரா பிறர்தர தீதும் நன்றும்

38. பின் வருவனவற்றுள் ஒழுங்கான சொற்றொடரைக் கண்டு எழுதுக:
அ) என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
ஆ) இந்த சுதந்திர தாகம் என்று தணியும்
இ) சுதந்திர தாகம் என்று தணியும் இந்த
ஈ) என்று தணியும் சுதந்திர தாகம் இந்த

39. பின் வருவனவற்றுள் ஒழுங்கான சொற்றொடரைக் காண்:
அ) கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்பட்டது போல
ஆ) ஆசைப்பட்டது போல முடவன் கொம்புத் தேனுக்கு
இ) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
ஈ) ஆசைப்பட்டது போல கொம்புத் தேனுக்கு முடவன்

40. பின் வருவனவற்றுள் ஒழுங்கான சொற்றொடரைத் தேர்ந்தெடு:
அ) துடுப்பை எறியாதே கரையை அடையும்முன்
ஆ) கரையை அடையும்முன் துடுப்பை எறியாதே
இ) எறியாதே துடுப்பை கரையை அடையும்முன்
ஈ) துடுப்பை எறியாதே அடையும்முன் கரையை

41. உவமையால் விளக்கப்பெறும் பொருள் யாது?
மழைமுகம் காணப் பயிர் போல
அ) தியாகம் ஆ) அன்பு
இ) மகிழ்ச்சி ஈ) வாட்டம்

42. கடலில் கரைத்த பெருங்காயம் போல
அ) நட்பு ஆ) பயனற்ற செயல்
இ) மறைபொருள் ஈ) பயன் மிகுதி

43. காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா
அ) நிலையாமை ஆ) நடுக்கம்
இ) துன்பம் ஈ) தியாகம்

44. ஊசியும் நூலும் போல
அ) துரோகம் ஆ) ஒற்றுமை
இ) இணை பிரியாமை ஈ) சேர்த்தல்

45. தாயைக் கண்ட சேய் போல
அ) மகிழ்ச்சி ஆ) துன்பம்
இ) தியாகம் ஈ) ஒற்றுமை

46. ஓரெழுத்து ஒரு மொழி
'வீ' என்பதன் பொருள்
அ) வீழ்தல் ஆ) மலர்
இ) வருந்துதல் ஈ) துன்பம்

47. 'ஆ' என்பதன் பொருள்
அ) பசு ஆ) வியப்பு
இ) ஆச்சரியம் ஈ) ஆண்

48. 'ஊ' என்பதன் பொருள்
அ) ஊட்டுதல் ஆ) இறைச்சி
இ) அழகு ஈ) மேலே

49. 'கா' என்பதன் பொருள்
அ) காடு ஆ) கூடு
இ) காத்தல் ஈ) சோலை

50. 'தே' என்பதன் பொருள்
அ) கடவுள் ஆ) தேவர்
இ) தேய்தல் ஈ) தேன்

www.LatestWalkin.com

51. கீழ்க்காணும் அடிகளில் எதுகையைத் தேர்ந்தெடுக்கவும்
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை
அ) அகழ்வாரைத் - தாங்கும் ஆ) அகழ்வாரைத் - இகழ்வார்ப்
இ) நிலம் போலத் - தம்மை ஈ) தம்மை - தலை

52. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானஞ் செய்வாரின் தலை
அ) மனத்தொடு - மொழியின் ஆ) தவத்தொடு - தலை
இ) தவத்தொடு - தானஞ் ஈ) மனத்தொடு - தானஞ்

53. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை
அ) துப்பார்க்குத் - துப்பாய ஆ) துப்பார்க்குத் - தூஉம்
இ) துப்பாய - தூஉம் ஈ) துப்பாக்கித் - மழை

54. கீழ்க்காணும் அடிகளில் மோனைத் தொடையைக் கண்டுபிடி.
அச்சமும் நாணமும் அறிவிலார்க்கு இல்லை
அ) அச்சமும் - நாணமும் ஆ) நாணமும் - இல்லை
இ) அச்சமும் - அறிவிலார்க்கு ஈ) அச்சமும் - இல்லை

55. 'சத்தியத் தீ' என்பதன் இலக்கணக் குறிப்பு கூறு
அ) உவமைத் தொகை ஆ) பண்புத் தொகை
இ) வினைத் தொகை ஈ) உருவகத் தொடர்

56. 'புகழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) காரியவாகு பெயர் ஆ) ஆகு பெயர்
இ) உரிச் சொல் ஈ) பண்புத் தொகை

57. 'எய்' என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயர்
அ) எய்தல் ஆ) எய்தவள்
இ) எய்து ஈ) எய்தி

58. 'வருகை' என்னும் சொல்லின் வேர்ச் சொல் தருக
அ) வருதல் ஆ) வரு
இ) வா ஈ) வந்த

59. சரியான விடையைத் தேர்வு செய்க

1) இலங்கேசுவரன் அ) சங்கரதாச சுவாமிகள்
2) பவளக் கொடி ஆ) அண்ணாதுரை
3) மயக்கம் இ) புலவர் குழந்தை
4) இராவண காவியம் ஈ) மனோகர்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | அ | ஆ | இ | ஈ |
| ஆ) | ஈ | அ | ஆ | இ |
| இ) | ஈ | இ | அ | ஆ |
| ஈ) | இ | ஆ | அ | ஈ |

60. சின்னூல் என்று அடைமொழியில் குறிக்கப்பெறும் நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) நேமிநாதம் ஈ) வீரசோழியம்

61. 'நாவாய்' என்ற சொல்லின் பொருள்
அ) படகு ஆ) பாய்மரக் கப்பல்
இ) நாக்கு ஈ) கப்பல்

62. 'பக்கனம்' என்ற சொல்லின் பொருள்
அ) தின் பண்டம் ஆ) செல்வம்
இ) மக்கள் ஈ) ஆவினம்

63. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க:
அ) சங்கு அலறுகிறது ஆ) சங்கு ஒலிக்கிறது
இ) சங்கு முழங்குகிறது ஈ) சங்கு ஒளிக்கிறது

64. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க:
அ) நார் கிழி ஆ) நார் அறு
இ) நார் வேய் ஈ) நார் பறி

65. அ) சோறு சாப்பிடு ஆ) சோறு உண்
இ) சோறு தின்னு ஈ) சோறு குடி

66. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க:
அ) வேலன் நெற்றியில் திருநீறு அணிந்திருந்தான்
ஆ) வேலன் நெத்தியில் திருநீர் அணிந்திருந்தான்
இ) வேலன் நெத்தியில் துருநீறு அணிந்திருந்தான்
ஈ) வேலன் நெற்றியில் திருநீர் அணிந்திருந்தான்

67. அ) நேற்று ஊட்டியில் அடமழை பெய்தது
ஆ) நேத்து ஊட்டியில் அடைமழை பொழிந்தது
இ) நேற்று ஊட்டியில் அடைமழை பெய்தது
ஈ) நேற்று ஊட்டியில் அடமழை பொழிஞ்சது

68. அ) ஒரு கிலோ கத்திரிக்காய் எத்தனை விலை?
ஆ) ஒரு கிலோ கத்தரிக்காய் என்ன விலை?
இ) ஒரு குலோ கத்திரிக்காய் என்ன வெல?
ஈ) ஒரு கிலோ கத்திரிக்காய் என்ன வெலை?

69. சந்திப் பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க:
அ) தூய தமிழ்ப்பற்று உண்மைத் தமிழ்ப் புலவர்களிடம் உண்டு
ஆ) தூயத் தமிழ்ப்பற்று உண்மை தமிழ் புலவர்களிடம் உண்டு
இ) தூயத் தமிழ்ப்பற்று உண்மைத் தமிழ் புலவர்களிடம் உண்டு
ஈ) தூய தமிழ்ப்பற்று உண்மை தமிழ்ப் புலவர்களிடம் உண்டு

70. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க:
அ) தீபாவளித் திருநாள் கவர்மெண்ட் விடுமுறை நாளாகும்
ஆ) தீபாவளித் திருநாள் ராஜ்ஜிய விடுமுறை நாளாகும்
இ) தீபாவளித் திருநாள் சர்க்கார் விடுமுறை நாளாகும்
ஈ) தீபாவளித் திருநாள் அரசு விடுமுறை நாளாகும்

71. பெயர்ச்சொல்லின் வகையறிக:
மதுரை
அ) பொருட்பெயர் ஆ) இடப்பெயர்
இ) காலப்பெயர் ஈ) சினைப்பெயர்

72. மார்கழி
அ) காலப்பெயர் ஆ) இடப்பெயர்
இ) பண்புப்பெயர் ஈ) தொழிற்பெயர்

73. ஓட்டம்
அ) காலப்பெயர் ஆ) பொருட்பெயர்
இ) பண்புப்பெயர் ஈ) தொழிற்பெயர்

74. சிங்கம்
அ) தொழிற்பெயர் ஆ) இடப்பெயர்
இ) பொருட்பெயர் ஈ) குணப்பெயர்

75. கிளை
அ) சினைப்பெயர் ஆ) பொருட்பெயர்
இ) தொழிற்பெயர் ஈ) சினைப்பெயர்

76. நடிப்பு
அ) குணப்பெயர் ஆ) பொருட்பெயர்
இ) தொழிற்பெயர் ஈ) சினைப்பெயர்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

77. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:
கல்விச் செல்வத்தைப் போற்றாதவர் எவரும் இலர்
அ) உடன்பாட்டு வாக்கியம் ஆ) எதிர்மறை வாக்கியம்
இ) செய்தி வாக்கியம் ஈ) கட்டளை வாக்கியம்

78. போட்டியில் சிலர்தான் வெற்றி பெற முடியும்
அ) செய்தி வாக்கியம் ஆ) எதிர்மறை வாக்கியம்
இ) உடன்பாட்டு வாக்கியம் ஈ) நேர்க் கூற்று

79. விருது குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது
அ) செயல்பாட்டு வினை ஆ) செய்வினை
இ) நேர்க்கூற்று வாக்கியம் ஈ) அயற்கூற்று வாக்கியம்

80. கோதை பாடம் கற்றாள்
அ) பிறவினை ஆ) தன்வினை
இ) செய்வினை ஈ) செயப்பாட்டு வினை

81. இளமையில் கல்
அ) செய்தி வாக்கியம் ஆ) உடன்பாட்டு வாக்கியம்
இ) கட்டளை வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

82. என்னே! வள்ளுவர் கோட்டத்தின் அழகு
அ) உணர்ச்சி வாக்கியம் ஆ) செய்தி வாக்கியம்
இ) உடன்பாட்டு வாக்கியம் ஈ) செய்வினை

83. சேர, சோழ, பாண்டியர் மூவரும் தமிழை வளர்த்தனர்
அ) கலவை வாக்கியம் ஆ) தொடர் வாக்கியம்
இ) தனி வாக்கியம் ஈ) செய்தி வாக்கியம்

84. உழவன் உழைத்து, களைத்து வீடு திரும்பினார்
அ) தனி வாக்கியம் ஆ) தொடர் வாக்கியம்
இ) கலவை வாக்கியம் ஈ) உடன்பாட்டு வாக்கியம்

85. நம் சமுதாயம் மேம்படவும், நம் நாடு முன்னேறவும், நாம் நாள்தோறும் நன்கு உழைக்கவேண்டும்
அ) தொடர் வாக்கியம் ஆ) தனி வாக்கியம்
இ) செய்தி வாக்கியம் ஈ) கலவை வாக்கியம்

86. பூங்கோதை பொம்மை செய்வித்தாள்
அ) பிறவினை ஆ) தன்வினை
இ) செய்வினை ஈ) செயப்பாட்டு வினை

87. பாவலேறு பெருஞ்சித்தரனாரின் இயற்பெயர்
அ) கனக சுப்புரத்தினம் ஆ) ராமையா
இ) துரை மாணிக்கம் ஈ) கலியாணசுந்தரம்

88. 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்று அழைக்கப்படுபவர்
அ) டி.கே.எஸ்.சகோதரர்கள் ஆ) பம்மல் சம்பந்த முதலியார்
இ) கோமல் சுவாமிநாதன் ஈ) சங்கரதாஸ் சுவாமிகள்

89. 'தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட்' என்று அழைக்கப்படுபவர்
அ) கல்கி ஆ) சுஜாதா
இ) ராஜம் ஐயர் ஈ) வேங்கடரமணி

90. 'நரை முடித்து உரை செய்தவர்' என்று புகழப்பட்டவர்
அ) மோசி கீரனார் ஆ) ஔவையார்
இ) கரிகாலன் ஈ) பாரி

91. 'தொன்னூல் விளக்கம்' என்னும் நூலை எழுதியவர்
அ) வீரமா முனிவர் ஆ) வீரகவிராயர்
இ) குமரகுருபரர் ஈ) பிங்கல முனிவர்

92. 'நைடதம்' என்னும் நூலை எழுதியவர்
அ) ஔவையார் ஆ) உலகநாதர்
இ) முனைப்பாடியார் ஈ) அதிவீரராமபாண்டியர்

93. 'திராவிட சிசு' என்று அழைக்கப்படுபவர்
அ) திருநாவுக்கரசர் ஆ) திருஞானசம்பந்தர்
இ) பெரியார் ஈ) சுந்தரர்

94. முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரி கர் - செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) புறநானூறு ஈ) அகநானூறு

95. 'சாதியிரண்டொழிய வேறில்லை' - செய்யுள் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ) ஆத்திச்சூடி ஆ) கொன்றை வேந்தன்
இ) உலக நீதி ஈ) நல்வழி

96. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையமே' இக்கூற்றினை கூறியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) திரு.வி.க.

97. மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டு மம்மா
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்

98. ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
அ) இளங்கோவடிகள் ஆ) கவிமணி
இ) பாரதிதாசன் ஈ) ஔவையார்

99. சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுத்தானந்த பாரதி ஈ) சுரதா

100. 'காடு' என்ற நாவலின் ஆசிரியர்
அ) எஸ்.ராமகிருஷ்ணன் ஆ) சுந்தர ராமசாமி
இ) ஜெயமோகன் ஈ) வைரமுத்து

## விடைகள் :

1.அ), 2.இ), 3.இ), 4.அ), 5.ஈ), 6.ஆ), 7.இ), 8.ஈ), 9.இ), 10.அ), 11.ஈ), 12.ஆ), 13.அ), 14.இ), 15.அ), 16.இ), 17.ஈ), 18.இ), 19.ஆ), 20.ஈ), 21.இ), 22.ஆ), 23.இ), 24.ஈ), 25.ஆ), 26.ஈ), 27.அ), 28.அ), 29.ஆ), 30.ஈ), 31.இ), 32.அ), 33.இ), 34.ஆ), 35.அ), 36.ஈ), 37.ஆ), 38.அ), 39.இ), 40.ஆ), 41.ஈ), 42.ஆ), 43.அ), 44.இ), 45.அ), 46.ஆ), 47.அ), 48.ஆ), 49.ஈ), 50.அ), 51.ஆ), 52.ஈ), 53.ஆ), 54.இ), 55.ஈ), 56.அ), 57.ஆ), 58.இ), 59.(1)ஈ, (2)அ, (3)ஆ, (4)இ, 60.இ), 61.ஈ), 62.அ), 63.இ), 64.அ), 65.ஆ), 66.அ), 67.இ), 68.ஆ), 69.அ), 70.ஈ), 71.ஆ), 72.அ), 73.ஈ), 74.இ), 75.அ), 76.இ), 77.ஆ), 78.இ), 79.அ), 80.ஆ), 81.இ), 82.அ), 83.இ), 84.ஆ), 85.ஈ), 86.அ), 87.இ), 88.ஈ), 89.அ), 90.இ), 91.அ), 92.ஈ), 93.ஆ), 94.அ), 95.ஈ), 96.ஆ), 97.இ), 98.அ), 99.அ), 100.இ).

www.LatestWalkin.com